நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்
முன்னிலை : திரு. சா. வரதராஜன், B.A.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2026 ஆம் ஆண்டு, மே மாதம் 05 ஆம் நாள் செவ்வாய்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண் 161/2022
*****

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime number of the Offence) | அரசுக்காக,காவல் உதவி ஆய்வாளர், சாத்தூர் தாலுகா காவல் நிலையம். (குற்ற எண்.173/2021) |
| 2. | எதிரியின் பெயர் (Name) | திரு.சுந்தர்ராஜன்,(வயது 42/26) த/பெ.ஜானகிராமன், பழைய காலனி, மாரியம்மன் கோவில் தெரு, சன்னியாசி பேட்டை, பழூர் அஞ்சல், பண்ருட்டி தாலுகா, கூடலூர் மாவட்டம் |
| 3. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 16.08.2021 |
| 8. | புகார் தேதி (Complaint) | 17.08.2021 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 10.11.2021 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 10.11.2021 |
| 11. | Commitment | – |
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 02.09.2022 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 30.04.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார். |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or finding on Accused) | எதிரி மீதுள்ள பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று கு.வி.மு.ச. பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார். |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | சாட்சிகளை முன்னிலைப்படுத்துவதில் காலதாமதம். |

இவ்வழக்கானது என் முன்பு 30.04.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சசிக்குமார், B.B.A., B.E., அவர்கள் முன்னிலையாகியும், அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.05.05 15:47:13 +0530

## தீர்ப்புரை

**1. குற்றச்சாட்டு :-**

16.08.2021ம் தேதி இரவு சுமார் 10.45 மணிக்கு ஸ்ரீதர் என்பவர் அவருக்கு சொந்தமான TN 72 G 0303 என்ற பதிவெண் கொண்ட Royal Enfield இருசக்கர வாகனத்தில் சென்னையில் உள்ள அவரது மனைவியை பார்க்க போவதாக கோவில்பட்டியிலிருந்து சாத்தூர் தேசிய நெடுஞ்சாலை மேற்கு பக்க சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓட்டி மது போதையில் உப்பத்தூர் விலக்கு அருகேயுள்ள விஜய் எடை நிலையம் அருகே இடது ஓரமாக வாகனத்தை நிறுத்தி அதில் படுத்திருந்த போது அந்த நேரத்தில் அதே திசையில் அதே சாலையில் அவருக்கு பின்னால் TN 30 U 6639 என்ற பதிவெண் கொண்ட லாரியை எதிரி சுந்தர்ராஜன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஒட்டி வந்து இருசக்கர வாகனத்தின் மீது ஏற்றி இறக்கியதில் ஸ்ரீதர் தலை முழுவதும் நசுங்கி உருகுலைந்து, வலது கை, இடது கை எலும்பு முறிந்து, வலது கால், இடது கால் எலும்பு முறிந்து, இடது கால் தொடையில் சிதைந்த இரத்தக்காயமும், உடல் முழுவதும் சிராய்ப்பு காயங்களால் இறப்பு ஏற்பட காரணமாக இருந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் நகல் :-**

இவ்வழக்கில், எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் அரசு தரப்பில் சமர்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் கீழ் அவருக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 ன் கீழ் விசாரணை :-**

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் இ.த.ச. பிரிவுகள் 279, 304A கீழான குற்றங்கள் இரண்டு ஆண்டுகள் வரை மட்டுமே தண்டனை விதிக்கத்தக்கதாகும். எனவே, எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அந்த குற்றங்களின் சாராம்சத்தை அவர் விளக்கி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள் :-**

பட்டியல் சாட்சிகளில் இருந்து 4 நபரும், கூடுதல் சாட்சியாக சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.மூக்கையா என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.5 வரை அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:20 +0530

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–**

**5.1.** 16.08.2021–ஆம் தேதி இரவு சுமார் 10:45 மணியளவில், இந்த வழக்கு விபத்தில் இறந்து போன ஸ்ரீதர் TN 72 G 0303 என்ற பதிவு எண் கொண்ட Royal Enfield இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையின் மேற்குப் பக்க சாலையில் சென்று கொண்டிருந்தபோது, அவருக்குப் பின்னால் வந்த TN 30 U 6639 என்ற பதிவு எண் கொண்ட லாரி மோதி, ஸ்ரீதரின் மேல் ஏறி இறங்கி சென்றது. சம்பவ இடத்திலேயே ஸ்ரீதரின் தலை முழுவதும் நசுங்கி, உடலில் காயம் ஏற்பட்டு அவர் இறந்துவிட்டார். அவருடைய செல்போனிலிருந்து அவரின் தந்தை அ.சா.1 – தவசிக்கு அ.சா.2 – ராஜலிங்கம் தகவல் கூறினார்.

**5.2.** அதன் அடிப்படையில் அ.சா.1 – தவசி 17.08.2021–ஆம் தேதி காலை 7:00 மணிக்கு சாத்தூர் தாலுகா காவல் நிலையத்திற்குச் சென்று உதவி ஆய்வாளர் பழனி என்பவரிடம் புகார் மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 173/2021–ன்கீழ், இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304(A)–ன் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்யப்பட்டது.

**5.3.** வழக்கைப் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி, 17.08.2021–ஆம் தேதி காலை 8:15 மணிக்குச் சம்பவ இடத்திற்குச் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் (அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்தார். சாத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து ஸ்ரீதரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை (அ.சா.ஆ.5) தயார் செய்தார். சாட்சிகளைத் தனித்தனியாக விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்தார்.

**5.4.** விபத்தில் ஈடுபட்ட TN 72 G 0303 என்ற பதிவு எண் கொண்ட ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தையும், TN 30 U 6639 என்ற பதிவு எண் கொண்ட லாரியையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்தார். அவற்றை ஆய்வு செய்த விருதுநகர் வட்டாரப் போக்குவரத்து வாகன ஆய்வாளர் செல்வராஜ் என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய ஆய்வு அறிக்கைகளைப் பெற்று, அவரின் வாக்குமூலத்தைக் காவல் ஆய்வாளர் பதிவு செய்தார். ஸ்ரீதரின் உடலைச் சடலக் கூறாய்வு செய்த மருத்துவர் மரிய கிரஷ் மோனிஷா என்பவரை விசாரித்து, அவர் வழங்கிய சடலக் கூறாய்வு அறிக்கையையும்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:24 +0530

(அ.சா.ஆ.9), இறுதி கருத்தையும் (அ.சா.ஆ.10) பெற்று அவருடைய வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

**5.5.** மற்ற சாட்சிகளை விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி, 10.11.2021–ஆம் தேதி வழக்கு எதிரியைக் கைது செய்து பிணையில் விடுவித்தார். அவருடைய விசாரணையிலிருந்து வழக்குச் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279 மற்றும் 304(A)–ன்கீழ் குற்றங்களுக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. குு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) கீழ் விசாரணை :–**

மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, அவர் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

எதிரி மீதுள்ள பிரிவுகள் 279, 304A இ.த.ச இன் கீழான குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. சாட்சியங்கள் மதிப்பீடு :–**

**8.1.** இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில், வழக்குச் சம்பவத்தை நேரில் பார்த்த நபர்களாக ராஜலிங்கம் மற்றும் பாண்டி ஆகிய இருவரும் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். அவர்களில் ராஜலிங்கம் அரசு தரப்பு இரண்டாவது சாட்சியாகவும் (PW2), பாண்டி அரசு தரப்பு மூன்றாவது சாட்சியாகவும் (PW3) விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்.

**8.2.** அ.சா.2 – ராஜலிங்கம் அவருடைய சாட்சியத்தில், கோவில்பட்டி – சாத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் சாலைக்கு மேற்குப் பக்கம் 'விஜய்' என்ற பெயரில் எடை நிலையம் (Weighbridge) வைத்துத் தொழில் செய்து வருவதாகவும், அதற்கு அருகே 'ஆர்யாஸ் ஹோட்டல்' இருக்கிறது என்றும், 2021–ஆம் ஆண்டு 8–வது மாதம் இரவு 10:50 மணி அளவில் அவருடைய எடை நிலையத்தில் அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது, ஆர்யாஸ் ஹோட்டலில் வேலை செய்யும் நபர்கள் வந்து சாலையில் விபத்து ஏற்பட்டுவிட்டது என்றும், அதைப் பார்ப்பதற்கு டார்ச் லைட் வேண்டும் என்றும் கேட்டதாகவும் கூறியுள்ளார்.

**8.3.** அ.சா.2 – ராஜலிங்கம் வெளியே வந்து பார்த்தபோது, புல்லட் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் அந்த வாகனத்தின் மீது கிடந்தார் என்றும், அவர் மீது வேறொரு வாகனம் ஏறி இறங்கி இருந்ததால் அவருடைய உடல் சிதைந்து அவர் இறந்து கிடந்தார்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:29 +0530

என்றும், அவருடைய செல்போனை எடுத்து இறந்து போன நபரின் தந்தைக்குப் போன் செய்து விவரத்தைக் கூறியதாகவும், அந்த நபரின் மீது எந்த வாகனம் மோதியது என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**8.4.** வழக்குச் சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு சாட்சியான அ.சா.3 – பாண்டி அவருடைய சாட்சியத்தில், சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர் உப்பத்தூர் சந்திப்பில் உள்ள 'திருப்பதி டீ ஸ்டாலில்' வேலை செய்து வந்ததாகவும், இரவு 10:30 மணியளவில் கோவில்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் ஒரு நபர் ராயல் என்பீல்டு இருசக்கர வாகனத்தில் உப்பத்தூர் சந்திப்பிற்கு முன்பாகச் சாத்தூரை நோக்கி வந்து கொண்டிருந்தபோது, அவர் சாலையில் நிலைதடுமாறி விழுந்துவிட்டதாகவும், அவர் எழுந்து நிற்பதற்குள் அதே திசையில் பின்னால் வந்த லாரி அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது என்றும், இதனால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் தலை நசுங்கிச் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநர் பற்றியோ, லாரியின் பதிவு எண் பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். மேற்படி இரண்டு நபர்களின் சாட்சியங்களிலிருந்து வழக்குச் சம்பவம் நடைபெற்றது என்பது உறுதியாகிறது.

**8.5.** ஆனால், அந்தச் சம்பவம் இந்த வழக்கின் எதிரி சுந்தர்ராஜன், அவர் ஓட்டிச் சென்ற லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டிச் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று கூறத்தக்க வகையில் சாட்சியங்கள் இல்லை. குறிப்பாக, அந்த இரண்டு சாட்சிகளும் வழக்குச் சம்பவத்தின் போது எதிரி தான் லாரியை ஓட்டிச் சென்றார் என்று எதுவும் குறிப்பிடவில்லை.

**8.6.** அதைத் தவிர, இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்டுள்ள புகார்தாரரான அ.சா.1 – தவசி , வழக்குச் சம்பவத்திற்குப் பிறகு சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு சாத்தூருக்கு வந்து புகார் கொடுத்த விவரத்தைப் பற்றிக் கூறியுள்ளார். அ.சா.4 – ராமர் என்பவர் வரைபடம் (அ.சா.ஆ.4) தயார் செய்யப்பட்டதைப் பற்றிச் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் முக்கியமான சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்ட மேற்படி நான்கு நபர்களின் சாட்சியங்களில் இருந்து, அரசுத் தரப்பு வழக்கை உறுதி செய்யக்கூடிய வகையில் சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8.7.** மேலும், அலுவல் ஆவணங்களான விபத்து பதிவேடு, சடலக் கூராய்வு அறிக்கை (அ.சா.ஆ.9), மோட்டார் வாகன அறிக்கை (அ.சா.ஆ.6 மற்றும் 7) ஆகியவற்றைச் சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 294–இன் கீழ்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:33 +0530

அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்குத் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று எதிரித் தரப்பில் கூறப்பட்டதால், இதர சாட்சிகள் அரசுத் தரப்பில் விலக்கிக் கொள்ளப்பட்டு, கூடுதல் சாட்சியாகச் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.5 – மூக்கையா அரசுத் தரப்பு ஐந்தாவது சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**8.8.** அவர் இந்த வழக்கில் நடைபெற்ற புலன் விசாரணை தொடர்பான விவரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். ஏற்கனவே கூறியது போல், இந்த வழக்கின் முக்கியமான சாட்சியங்களில் இருந்து, எதிரி லாரியை அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் அசட்டுத் துணிச்சலுடனும் ஓட்டிச் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று முடிவு செய்ய முடியாத நிலை உள்ளதால், புலன் விசாரணை தொடர்பான விவரங்களை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்ததும், அலுவல் ஆவணங்களான விபத்து பதிவேடு, சடலக் கூராய்வு அறிக்கை (அ.சா.ஆ.9) மற்றும் மோட்டார் வாகன அறிக்கை (அ.சா.ஆ.6 மற்றும் 7) ஆகியவற்றைக் குறியீடு செய்ய எதிரித் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்ததும், எவ்வகையிலும் அரசுத் தரப்பு வழக்கை மேம்படுத்துவதாக இல்லை.

**8.9.** இதன் அடிப்படையில், பரிசீலனை செய்யப்பட்ட சாட்சியங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பாக, அரசுத் தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கத் தவறி உள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களிலிருந்து அவரை விடுதலை செய்ய, அவருக்குச் சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**9. <u>முடிவு:–</u>**

**9.1.** எதிரி மீதுள்ள பிரிவுகள் 279, 304A இ.த.ச கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவர் கு.வி.மு.ச. பிரிவு 255(1) இன் கீழ் விடுதலை செய்யப்படுகிறார் .

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**9.3.** இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 05.05.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:38 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.தவசி (நிகழ்நிலை புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. ராஜலிங்கம் |
| அ.சா.3 | திரு.கருத்தப்பாண்டி என்ற பாண்டி |
| அ.சா.4 | திரு.ராமர் |
| அ.சா.5 | திரு.மூக்கையா (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 17.08.2021 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 17.08.2021 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | 17.08.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 17.08.2021 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.5 | 17.08.2021 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 31.08.2021 | TN 72 G 0303 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.7 | 09.09.2021 | TN 30 U 6639 என்ற பதிவெண் கொண்ட லாரிக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.8 | 08.11.2021 | பகுப்பாய்வு ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | 17.08.2021 | பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.10 | 21.01.2022 | இறுதி கருத்துரை சான்று |

**3. அரசு தரப்பு சான்று பொருள் :-**இல்லை.

**4. எதிரி தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-** இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.05.05 15:47:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.II,
சாத்தூர்.

**குறிப்பு :-**

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.